# பிளேகம்மா ஆலயம்

( கொடுமையான வியாதியான பிளேக் என்ற நோயில் இருந்து விடுதலை தந்த அன்னை)

**சாந்திப்பிரியா**

நமக்கெல்லாம் அம்மை நோய் வந்தவர்கள் சென்று ஆராதிக்கும் தெய்வமான மாரியம்மன், இரேணுகா தேவி போன்ற தெய்வங்களைப் பற்றித்தான் தெரிந்து இருக்கும். ஆனால் புதியதாக சமீபத்தில் ஒரு செய்தி கிடைத்தது. பெங்களூரில் கடுமையான பிளேக் நோய் வந்த பொழுது ஒரு தெய்வத்தை கும்பிட்டு உள்ளனர் அந்த அன்னையின் பெயர் பிளேக் அம்மா என்கின்ற இராஜராஜேஸ்வரி ஆகும். 1898 ஆம் ஆண்டு வெளியூரில் இருந்த வந்த ஒரு ரெயில்வே சிப்பந்தியினால் பிளேக் என்ற நோய் பரவியதாம். பிளேக் நோயின் மூல காரணமே எலிகள்தான். அந்த நேரத்தில் ஏற்பட்ட கடுமையான பிளேக் நோய் பல உயிர்களை பலி எடுத்துக் கொள்ள பெங்களூரை விட்டு பலரும் வெளியேறத் துவங்கியராம். அப்பொழுது இருந்த பிரிடிஷ் அரசு அர சுயந்திரத்தை பலமாக முடுக்கிவிட்டு நோயை கட்டுப்படுத்த முயன்றாலும் தெய்வ நம்பிக்கைக் கொண்ட மக்கள் தேவியை வணங்கி உள்ளனர். சித்தபுரா என முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாக அழைக்கப்பட்ட அந்த இடம் ஒரு கிராமமாகவே இருந்துள்ளது. அங்கு பல சன்யாசிகளும் சித்தர்களும் வாழ்ந்து உள்ளதாகக் கூறுகின்றனர். இப்போது அந்த இடம் தியாகராஜ நகர் என உரு மாறி உள்ளதாகவும், அந்த பிளேக் நோய் வந்த பொழுது இரண்டு கற்களையே ஒரு தேவியாக வணங்கி தம்மைக் காத்தருளுமாறு கேட்டதினால் அவர்கள் அந்த நோயில் இருந்து காப்பாற்றப்பட்டதாக சிலர் கூறுகின்றனர். அந்த இரண்டு கற்கள் இருந்த இடத்தில்தான் இன்றைக்கு பிளேகம்மா ஆலயம் அமைந்துள்ளது. அந்த காலத்தில் பல சித்தர்களும், சன்யாசிகளும் அந்த இடத்தில் இருந்திருந்ததினால் அவர்களில் சிலரே தேவியை ஆராதித்து மக்களைக் காப்பாற்ற அந்த கற்களுக்கு சக்தி கொடுத்திருந்திருக்க வேண்டும்.

சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்த கற்கள் இருந்த இடத்தில் ஆலயம் எழுந்துள்ளது. அங்கு பல இடங்களில் இருந்தும் மக்கள் வந்து போகின்றனர் தமது வியாதிகள் குணமாவதாக நம்பிக்கையுடன் கூறுகின்றனராம்.

வெள்ளிக் கிழமைகளிலும், செவ்வாய் கிழமைகளிலும் பெருவாரியான பெண் பக்தர்கள் அங்கு வந்து அன்னையை வேண்டிக் கொண்டு எலுமிச்சை பழத்தைப் இரண்டாக வெட்டி அதில் எண்ணை விட்டு வணங்குகின்றனர். நவராத்ரி விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றதாம்.